**சுருக்கம்**

பேரிடர் மேலாண்மை – 2020ஆம் ஆண்டு ஏப்ரல், மே மாதங்களில் ஏற்பட்ட மழை மற்றும் சூறாவளி காற்று – ஈரோடு, விழுப்புரம், திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், சேலம், கோயம்புத்தூர், தேனி, சிவகங்கை, விருதுநகர், தஞ்சாவூர், கரூர், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, தூத்துக்குடி, நீலகிரி, புதுக்கோட்டை மற்றும் மதுரை மாவட்டங்களில் தோட்டக்கலை பயிர்கள் சேதம் – மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.1,97,92,742/- வழங்குவது – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, பேரிடர் மேலாண்மை அலகு,**
**பே.மே–3(2) பிரிவு**

அரசாணை (நிலை) எண்.667

நாள் 27.11.2020
சார்வரி, கார்த்திகை 12,
திருவள்ளுவர் ஆண்டு, 2051
படிக்கப்பட்டது:

1. அரசாணை (பல்வகை) எண்.380, வருவாய் (பே.மே.3(2)) துறை, நாள் 27.10.2015.
2. கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர், சேப்பாக்கம், சென்னை–5 அவர்களின் கடித எண்.இ.பே.1/2086/2020, நாள் 29.09.2020.

----

**ஆணை:**

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் அவர்கள் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-

i. ஈரோடு, விழுப்புரம், திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், சேலம், கோயம்புத்தூர், தேனி, சிவகங்கை, விருதுநகர், தஞ்சாவூர், கரூர், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, தூத்துக்குடி நீலகிரி, புதுக்கோட்டை, மதுரை மாவட்டங்களில் 2020ம் ஆண்டு ஏப்ரல், மே மாதங்களில் ஏற்பட்ட மழை மற்றும் சூறாவளிக் காற்றினால் தோட்டக்கலைப் பயிர்கள் சேதம் அடைந்ததை, அந்தந்த மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குநர்களுடன் கூட்டு புலத்தணிக்கை செய்து 33 விழுக்காடுக்கு மேல் சேதம் அடைந்ததாகவும் படிவம் II-B-ல் பரிந்துரை செய்து அறிக்கை வரப்பெற்றுள்ளது.

ii. ஈரோடு, விழுப்புரம், திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், சேலம், கோயம்புத்தூர், தேனி, சிவகங்கை, விருதுநகர், தஞ்சாவூர், கரூர், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, தூத்துக்குடி நீலகிரி, புதுக்கோட்டை, மதுரை மாவட்டங்களில் 2020ம் ஆண்டு ஏப்ரல், மே மாதங்களில் ஏற்பட்ட மழை மற்றும் சூறாவளிக் காற்றினால் தோட்டக்கலைப் பயிர்கள் சேதம் அடைந்ததற்குரிய நிவாரணத் தொகையினை, இயக்குநர், தோட்டக்கலை மற்றும்

மலைப்பயிர்கள் துறை, சேப்பாக்கம், சென்னை வழங்க கீழ்க்கண்டவாறு பரிந்துரை செய்துள்ளார்:–

| எண் | மாவட்டம் | இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, சேப்பாக்கம், கோப்பு. எண்/ நாள் | மாவட்ட ஆட்சியர் கோப்பு. எண் / நாள் | பாதிக்கப்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கை | பயிரிடப்பட்ட பரப்பளவு (ஹெக்டேரில்) | பாதிக்கப்பட்ட பரப்பளவு (ஹெக்டேரில்) | தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | ஈரோடு | 6591/2020 dt.23.05.2020 | 3930/2020/DM, dt.30.04.2020 | 174 | 113.225 | 51.284 | 692334.00 |
| | | 6591/2020 dt.01.06.2020 | 3930/2020/DM dt.30.04.2020 | 28 | 42.40 | 20.59 | 277965.00 |
| | | | 3930/2020 /DM dt.06.05.2020 | 41 | 30.275 | 16.74 | 225990.00 |
| | | | மொத்தம் | 69 | 72.675 | 37.33 | 503955.00 |
| | | 6591/2020 dt.02.06.2020 | 9826/2020/DM dt.21.05.2020 | 15 | 12.49 | 8.39 | 113265.00 |
| | | 6591/2020 dt.23.07.2020 | 11649/2020/DM dt.22.06.2020 | 82 | 71.42 | 22.34 | 301590.00 |
| | | | 11649/2020/DM dt.09.07.2020 | 3 | 1.50 | 0.81 | 10935.00 |
| | | 6591/2020 dt.21.05.2020 | 3930/2020/DM dt.15.05.2020 | 22 | 17.505 | 9.80 | 132300.00 |
| | | | மொத்தம் | **365** | **288.815** | **129.954** | **1754379.00** |
| 2. | விழுப்புரம் | 6591/2020 dt.21.05.2020 | D.M/8368/2020 dt.23.04.2020 | 11 | 5.54 | 3.73 | 50355.00 |
| | | | மொத்தம் | **11** | **5.54** | **3.73** | **50355.00** |
| 3. | திருச்சிராப்பள்ளி | 6591/2020 dt.21.05.2020 | G6/9612/2020 dt.23.04.2020 | 1502 | 815.601 | 581.228 | 7846578.00 |
| | | | மொத்தம் | **1502** | **815.601** | **581.228** | **7846578.00** |
| 4. | பெரம்பலூர் | 6591/2020 dt.02.06.2020 | E2/1018/2020 dt.28.04.2020 | 44 | 16.305 | 9.25 | 124875.00 |
| | | | மொத்தம் | **44** | **16.305** | **9.25** | **124875.00** |
| 5. | சேலம் | 6591/2020 dt.23.05.2020 | 3176/2020/D.M dt.29.04.2020 | 109 | 55.13 | 31.54 | 426690.00 |
| | | | 3176/2020/D.M dt.14.05.2020 | 47 | 27.340 | 16.50 | 224775.00 |
| | | | 3176/2020/D.M dt.20.05.2020 | 9 | 2.98 | 1.79 | 24165.00 |
| | | | மொத்தம் | **165** | **85.45** | **49.83** | **675630.00** |
| 6. | கோயம்புத்தூர் | 6591/2020 dt.21.05.2020 | 7742/2019/D.M dt.29.04.2020 | 75 | 44.185 | 28.73 | 387855.00 |
| | | | மொத்தம் | **75** | **44.185** | **28.73** | **387855.00** |
| 7. | தேனி | 6591/2020 dt.01.06.2020 | 7539/D.M/2020 12.05.2020 | 24 | 22.54 | 11.414 | 154089.00 |
| | | 6591/2020 dt.06.06.2020 | 7539/D.M/2020 19.05.2020 | 32 | 26.955 | 15.32 | 206820.00 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 6591/2020 dt.06.07.2020 | 6078/D.M/2020 18.06.2020 | 24 | 17.949 | 10.345 | 139657.50 |
| | | 6591/2020 dt.23.07.2020 | 6078/D.M/2020 10.07.2020 | 3 | 1.001 | 0.58 | 7830.00 |
| | | | மொத்தம் | **83** | **68.445** | **37.659** | **508396.50** |
| 8. | சிவகங்கை | 6591/2020 dt.19.05.2020 | D6/1719/2020 dt.18.05.2020 | 46 | 21.72 | 7.03 | 94905.00 |
| | | | மொத்தம் | **46** | **21.72** | **7.03** | **94905.00** |
| 9. | விருதுநகர் | 6591/2020 dt.01.06.2020 | D.M2/10021/2020 25.08.2020 | 28 | 14.00 | 5.98 | 80730.00 |
| | | | மொத்தம் | **28** | **14.00** | **5.98** | **80730.00** |
| 10. | தஞ்சாவூர் | 6591/2020 dt.21.05.2020 | 10554/2020/D.M1 dt.22.05.2020 | 7 | 3.92 | 1.82 | 24570.00 |
| | | 6591/2020 dt.29.06.2020 | 10554/2020/D.M1 dt.17.06.2020 | 32 | 18.065 | 9.93 | 134055.00 |
| | | | மொத்தம் | **39** | **21.985** | **11.75** | **158625.00** |
| 11. | கரூர் | 6591/2020 dt.01.06.2020 | D1/4862/2020 dt. 26.05.2020 | 302 | 211.61 | 80.45 | 1086075.00 |
| | | | D1/4861/2020 dt. 26.05.2020 | 30 | 19.81 | 4.54 | 61290.00 |
| | | | மொத்தம் | **332** | **231.42** | **84.99** | **1147365.00** |
| 12. | திருவண்ணா மலை | 6591/2020 dt.02.06.2020 | D.M1/9413/2020 dt.27.05.2020 | 229 | 134.19 | 73.715 | 995152.50 |
| | | 6591/2020 dt.23.07.2020 | D.M1/12277/2020 dt.08.07.2020 | 237 | 97.48 | 72.41 | 977535.00 |
| | | | மொத்தம் | **466** | **231.67** | **146.125** | **1972687.50** |
| 13. | கிருஷ்ணகிரி | 6591/2020 dt.06.07.2020 | 14323/2020/D.M dt.17.06.2020 | 11 | 4.295 | 2.53 | 34155.00 |
| | | | மொத்தம் | **11** | **4.295** | **2.53** | **34155.00** |
| 14. | தூத்துக்குடி | 6591/2020 dt.06.07.2020 | D.M1/12042/2020 dt. 19.06.2020 | 1469 | 761.323 | 247.17 | 3343117.50 |
| | | | மொத்தம் | **1469** | **761.323** | **247.17** | **3343117.50** |
| 15. | நீலகிரி | 6591/2020 dt.14.07.2020 | E1/3693/2019 dt. 30.06.2020 | 10 | 4.00 | 1.24 | 16740.00 |
| | | | மொத்தம் | **10** | **4.00** | **1.24** | **16740.00** |
| 16. | புதுக்கோட்டை | 6591/2020 dt.24.07.2020 | DM.21/2020 dt.10.07.2020 | 156 | 66.24 | 32.86 | 443610.00 |
| | | | மொத்தம் | **156** | **66.24** | **32.86** | **443610.00** |
| 17. | மதுரை | 6591/2020 dt.21.08.2020 | 20272/2020/D6 dt.10.08.2020 | 298 | 170.49 | 85.388 | 1152738.00 |
| | | | மொத்தம் | **298** | **170.49** | **85.388** | **1152738.00** |
| | | | ஆக மொத்தம் கூடுதல் | **5100** | **2851.484** | **1465.444** | **19792742.00** |

**2.** மேலும், கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள், மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின் பிற்சேர்க்கை வரிசை எண்.5B(a)-ன் படி வேளாண்மை, தோட்டக்கலை மற்றும் மலைத்தோட்டப் பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.13,500/– மற்றும் 5B(b)-ன் படி நிலையான பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.18,000/–

வீதம் நிவாரணத் தொகையாக வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது எனவும், ஈரோடு, விழுப்புரம், திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், சேலம், கோயம்புத்தூர், தேனி, சிவகங்கை, விருதுநகர், தஞ்சாவூர், கரூர், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, தூத்துக்குடி நீலகிரி, புதுக்கோட்டை மற்றும் மதுரை மாவட்ட ஆட்சியர்களின் முன்மொழிவுகள் மற்றும் அதன் மீதான தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் அவர்களின் பரிந்துரை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, 2020 ஆம் ஆண்டு ஏப்ரல், மே மாதங்களில் ஏற்பட்ட மழை மற்றும் சூறாவளிக் காற்றினால் தோட்டக்கலை பயிர்கள் சேதமடைந்த மேற்படி 17 மாவட்டங்களுக்கும் மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.1,97,92,742 /- (ரூபாய் ஒரு கோடியே தொண்ணூற்று ஏழு இலட்சத்து தொண்ணூற்று இரண்டாயிரத்து ஏழுநூற்று நாற்பத்து இரண்டு மட்டும்) வழங்க கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் அவர்கள் பரிந்துரை செய்துள்ளார்.

3. மேற்காணும் கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கருத்துருவினை பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று, 2020 ஆம் ஆண்டு ஏப்ரல், மே மாதங்களில் ஏற்பட்ட மழை மற்றும் சூறாவளிக் காற்றினால் தோட்டக்கலை பயிர்கள் சேதமடைந்த ஈரோடு, விழுப்புரம், திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், சேலம், கோயம்புத்தூர், தேனி, சிவகங்கை, விருதுநகர், தஞ்சாவூர், கரூர், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, தூத்துக்குடி நீலகிரி, புதுக்கோட்டை மற்றும் மதுரை ஆகிய 17 மாவட்டங்களுக்கும் மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.1,97,92,742 /- (ரூபாய் ஒரு கோடியே தொண்ணூற்று ஏழு இலட்சத்து தொண்ணூற்று இரண்டாயிரத்து ஏழுநூற்று நாற்பத்து இரண்டு மட்டும்) மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி–3ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

**"2245 இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு – 02 வெள்ளம், புயல் முதலியவை – 800 ஏனைய செலவு – மாநிலச் செலவினங்கள் – BH வெள்ளம் பாதித்த பகுதிகளில் உள்ள தோட்டக்கலைப் பயிர்கள் சேதமுற்றதற்கு உழவர்களுக்கு நிவாரண நடவடிக்கைகள் – 311 மானியங்கள் – 01 தனித்திட்ட மானியம்**
**(பழைய த.தொ.கு: 2245 02 800 BH 1114)**
**(IFHRMS த.தொ.கு. 2245 02 800 BH 31101)".**

5. மேலே பத்தி–3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்திற்கான நிதியொதுக்கம் ரூ.1,97,92,742/– 2020–2021 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவினத்திற்கு 2020–2021–ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்து சட்ட மன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். அத்தகைய ஒதுக்கீட்டை எதிர்நோக்கி, மேலே பத்தி–3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை பெற்று வழங்க கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையருக்கு அதிகாரமளிக்கப்படுகிறது. மேலும், இச்செலவினத்தை 2020–2021 திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துக்களை உரிய நேரத்தில் நிதி (வருவாய்) துறைக்கு அனுப்புமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதி (வருவாய்) துறையின் அ.சா.எண்.41581/நிதி(வருவாய்)/2020, நாள் 20.11.2020ல் பெறப்பட்ட இசைவுடனும், கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண்.909 (தொள்ளாயிரத்து ஒன்பது)–இன்படியும் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

அதுல்ய மிஸ்ரா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

**பெறுநர்**

கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை–600 005.
ஆணையர் (பேரிடர் மேலாண்மை) தமிழ்நாடு பேரிடர் அபாய தணிப்பு முகமை,
சேப்பாக்கம், சென்னை–600 005.
மாவட்ட ஆட்சியர்,
ஈரோடு, விழுப்புரம், திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், சேலம், கோயம்புத்தூர், தேனி, சிவகங்கை, விருதுநகர், தஞ்சாவூர், கரூர், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, தூத்துக்குடி நீலகிரி, புதுக்கோட்டை மற்றும் மதுரை.
மாவட்ட கருவூல அலுவலர்,
ஈரோடு, விழுப்புரம், திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், சேலம், கோயம்புத்தூர், தேனி, சிவகங்கை, விருதுநகர், தஞ்சாவூர், கரூர், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, தூத்துக்குடி நீலகிரி, புதுக்கோட்டை மற்றும் மதுரை
முதன்மை கணக்காயர், சென்னை–600018/600 035.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–600 008.

**நகல்**

கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600009.
கூடுதல் தலைமைச் செயலாளர், உள், மதுவிலக்கு, சென்னை–600009.
முதன்மைச் செயலாளர், நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–600009.
முதன்மைச் செயலாளர், பொதுப்பணித் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600009.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–600009.
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சரின்
சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை–600009.
தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலாளர்,
தலைமைச் செயலகம், சென்னை–600009.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அவர்களின் முதன்மை தனிச் செயலாளர்,
தலைமைச் செயலகம், சென்னை–600009.
நிதி (வருவாய் / வ.செ–1 / வ.செ.–2/வ.வ.1) துறை,
தலைமைச் செயலகம், சென்னை–600009.
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (அநமு) துறை,
தலைமைச் செயலகம், சென்னை–600009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர் 27.11.20
27/11/2020